


# கவின்கமல் நினைவாக...

## சிறப்பு மலர்





# கவின்கமல் நினைவாக...

## சிறப்பு மலர்

ஸ்தாபக குழு இயக்கம்
வலம்புரி கவிதா வட்டம்
(வகவம்)

KAVIN KAMAL NINAIVAKA..

Souvnir

First Edition - 2022

ISBN-978-624-99091-0-6

Published by

© Founder's Committee

Valampuri Kavitha Vattam (Vakavam)
No 9, Saunder's Court Colombo - 02
Sri Lanka
94779664063

doctorthassim@gmail.com

**கவின்கமல் நினைவாக...**

சிறப்பு மலர்

முதற்பதிப்பு-2022

ISBN-978-624-99091-0-6

**வெளியீடு**

©ஸ்தாபக குழு இயக்கம்

வலம்புரி கவிதா வட்டம் (வகவம்)

## ஸ்தாபக குழு இயக்கம்

## வலம்புரி கவிதா வட்டம் (வகவம்)

## மறைந்த வகவம்

## ஸ்தாபக பொதுச்செயலாளர்

## கவிஞர் கவின்கமல் ஞாபகார்த்த

## சர்வதேச கவிதைப் போட்டி-2020

பரிசளிப்பு விழா

13.02.2022

ஞாயிறு  காலை 10.00 மணி

கொழும்புத் தமிழ்ச் சங்கம்

(விநோதன் மண்டபம்)

# நிகழ்வுகள்

முன்னிலை - இலக்கியப் புரவலர் ஹாஸிம் உமர்

சிறப்பதிதி - எஸ்.ரவீந்திரன். JP
(Super Light Garments Industries (Pvt) Ltd )

- தலைமை

டாக்டர் தாஸிம் அகமது
(தலைவர், ஸ்தாபக குழு இயக்கம்-வகவம்)

- வரவேற்புரை

டாக்டர் எம். எச். நூர்தீன்
(பொருளாளர், ஸ்தாபக குழு இயக்கம்-வகவம்)

- சிறப்புரை

"பரிசுபெற்ற கவிதைகள் ஒரு பார்வை"
'தமிழ்மாமணி' அல்-அசூமத்

- விருது வழங்கல்
- நூல் வெளியீடு

'கவின்கமல் நினைவு மலர்'
முதற்பிரதி பெறுநர்- இலக்கியப் புரவலர் ஹாஸிம் உமர்

- கௌரவிப்பு நிகழ்வு

கவிஞர் முல்லை முஸ்ரிபா

- பாராட்டுரை

மேமன்கவி

- கருத்துரைகள்

டாக்டர் தி.ஞானசேகரன் ( பிரதம ஆசிரியர், "ஞானம்")
திருமதி வசந்தி தயாபரன் ( செயலாளர், தகவம் )

- நன்றியுரை

கலைக்கமல்

(செயலாளர், ஸ்தாபக குழு இயக்கம்-வகவம்)
ஸ்தாபக குழு இயக்கம் (வகவம்)-0779664063

# பதிப்புரை

**1981ஆம் ஆண்டு வலம்புரி கவிதா வட்டம் உருவாக முக்கிய பங்களாயிருந்த கவிஞர் கவின்கமல் அவர்களின் ஞாபகார்த்தமாக ஸ்தாபக குழு இயக்கத்தினால் (வகவம்) நடத்தப்பட்ட சர்வதேச கவிதைப் போட்டி பரிசளிப்பு விழாவில் கவின்கமல் நினைவாக எனும் இந்த மலர் வெளியிடப்படுகிறது.**

**இந்த மலருக்கான ஆக்கங்கள் தந்து உதவிய அனைவருக்கும் எமது நன்றிகள்.**

ஸ்தாபக குழு இயக்கம்
வலம்புரி கவிதை வட்டம் (வகவம்)

## வாழ்த்துரைகள்

## இலக்கியப் புரவலர் ஹாஸிம் உமர்

வலம்புரி கவிதா வட்டத்தை ஆரம்ப காலம் தொடக்கம் நான் அறிவேன். அதன் காரணமாக கவிஞர் கவின்கமலையும் நான் அறிவேன். வகவம் உருவான காலத்திலிருந்து அதன் செயற்பாடுகளுக்காய் தன்னை அர்ப்பணித்து செயற்பட்டவர். அவர். ஓர் இயக்கம் பலமாகவும் சிறப்பாகவும் வளர, எல்லா இயக்ககங்களிகளிலும் கவின்கமல் போன்ற ஒரிருவர்கள்தான் இருப்பார்கள். அத்தகையவர்களால்தான் அந்த இயக்கங்கள் சிறப்பைப் பெறுகின்றன,

அந்த வகையில் வகவம் கடந்த காலங்களில் கடந்த வரலாற்றை பதிக்கும் ஆவணங்களை மிக கவனமாக காத்து வந்தவர் அவர். அவற்றின் மூலம் வகவத்தின் அசலான வரலாற்றை மக்கள் அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

ஸ்தாபக குழு இயக்கம்(வகவம்) கவின்கமலின் ஞாபகர்த்தமாக சர்வதேச கவிதைப் போட்டி நடத்தியமை பாராட்டக் கூடிய ஒரு விடயமாக இருக்கிறது. அதற்காக அவ்வியக்கத்திற்கு எனது பாராட்டுக்களை தெரிவித்து கொள்கிறேன்,

எதிர்காலத்தில் கவின்கமலின் பெயரால் சிறப்பான முறையில், பல கலை இலக்கியப் பணிகளில் ஸ்தாபக குழு இயக்கம் (வகவம்) ஈடுபட, எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## எஸ்.ரவீந்திரன்.JP;
Super light Garments industries (pvt) Ltd

அமரர் கவின்கமல் ஞாபகார்த்த சர்வதேச கவிதைப் போட்டி பரிசளிப்பு விழாவில் சிறப்பதிதியாக கலந்துகொள்வதையிட்டு பெரு மகிழ்வெய்துகிறேன்.

ஈழத்து தமிழ்க் கவிதை வளர்ச்சியில் நீண்ட காலமாக சிறந்த பங்களிப்புகளை வழங்கிவரும் வலம்புரி கவிதா வட்டம் எனும் பெயரில் பிரகடனப் படுத்தப்பட்ட அதன் ஸ்தாபக குழுவினர் இயக்கரீதியாக செயற்பட்டுவரும் அர்ப்பணிப்புடன் கூடிய தமிழ்க் கவிதைப்பணி போற்றுதற்குரியதாகும். சர்வதேச கவிதைப்போட்டியில் முதற்பரிசினைப் பெற்றுக்கொண்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த புலவர் எஸ்.மோகன்குமார் அவர்கள் விருது பணப்பரிசு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்படுவது கண்டு வகவம் ஸ்தாபக குழு இயக்கமானது சர்வதேச மயப்படுத்தப்பட்ட தமிழ்ப்பணி ஆற்றுகிறது என்பதை எடுத்துக் காட்டி நிற்கிறது. ஸ்தாபக குழு இயக்கம் வலம்புரி கவிதா வட்டத்தினர் மேற்கொண்டுவரும் அனைத்து தமிழ்ப் பணிகளும் எதிர்காலத்தில் சிறப்புற வெற்றிபெற்றுத் தொடரவேண்டும் என வாழ்த்தி மகிழ்கிறேன்.

.

## தி. ஞானசேகரன்
(ஞானம் பிரதம ஆசிரியர்)

வலம்புரி கவிதா வட்டம் (வகவம்) ஸ்தாபிக்கப்பட்ட காலத்திலிருந்தே அதன் செயற்பாடுளை நாம் அறிவோம். கவிதை தொடர்பான அரங்குகள், கவிதை நூல்களின் வெளியீடு, மறைந்த ஈழத்துக் கவிஞர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சிகள், வெளிநாட்டுக் கவிஞர்களின் பங்களிப்புடன் கூடிய சிறப்பு நிகழ்ச்சிகள், கவிதைகளுடன் தொடர்பான நூல் விமர்சனங்கள், பயிற்சிப்பட்டறை, கவிஞர்கள் கௌரவிப்பு, மரபுக்கவிதைகள் வாசிப்பு, புதுக்கவிதை நவீன கவிதைகள் மொழிபெயர்ப்புக் கவிதைகள் அறிமுகம் ஆகியவற்றுடன் பிறமொழிக்கவிதைகள் தொடர்பான கருத்தாடல்கள், யாப்பியல் வகுப்புகள் திறந்த வெளிக்கவியரங்குகள் போன்றவற்றை தொடர்ச்சியாக நடத்திவந்தது.

இந்த நிறுவகம் 1981 நவம்பர் மாதம் 20இல் ஐந்து உறுப்பினர்கள் ஒன்றுசேர்ந்து ஸ்தாபிக்கப்பட்போது அதன் ஸ்தாபக பொதுச் செயலாளராக இருந்தவர் கவின்கமல் ஆவார். இவரே 40 வருட காலம் மேற்குறிப்பிட்ட செயற்பாடுகள் அனைத்தையும் முன்னின்று ஒத்துழைப்பு வழங்கி அரும் பணியாற்றியவர்.

அவரது எண்ணக்கருவில் உருவானதுதான் வலம்புரி கவிதா வட்டம் எனும் மகுடப்பெயரும் அதன் அடிப்படைக் கொள்கை கோட்பாடுகளுமாகும். இதே மகுடப்பெயரில்

நூற்றுக்கணக்கான திறந்த வெளிக் கவியரங்குகள் வெவ்வேறு தலைமைகளில் நடைபெற்றிருப்பது ஈழத்துக் கவிதைப்புலத்தில் ஒரு வரலாற்றுச் சாதனை.

1982ஆம் ஆண்டு வலம்புரி கவிதா வட்டம் தனது முதலாவது ஆண்டு விழாவைக் கொழும்பில் கொண்டாடியது. அவ்வாண்டில் முதலாவது சர்வதேச கவிதைப் போட்டி நடத்தி பரிசளிப்பு விழாவும் நடத்தியது. இப்பரிசளிப்பு விழாவுக்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றி வலம்புரி கவிதா வட்டத்துக்கு பெருமை சேர்த்தவரும் கவின்கமலாவார்.

2013இன் பின்னர் கவின் கமல் நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில் 2016 டிசம்பர் மாதம் அமரத்துவம் அடைந்தார்.

அதன்பின்னர், இந்த அமைப்பு ஷவலம்புரி கவிதா வட்டம்(வகவம்) ஸ்தாபக குழு இயக்கம்; எனும் பெயரில் இயங்கத்தொடங்கி, ‘கவின் கமல் ஞாபகார்த்த சர்வதேச கவிதைப் போட்டியை 2020களில் அறிவித்தது.

அப்போட்டியில் வெற்றிபெற்ற கவிஞர்களுக்கான பரிசளிப்பு விழா தற்போது நடைபெறுவது பாராட்டுக்குரியது.

இதனை முன்னின்று நடத்தும் ஸ்தாபக குழு இயக்கம் வலம்புரிகவிதாவட்டத்தின்சிரேக்ஷ்டஉறுப்பினர்களானதலைவர் தாஸிம் அகமது, பொதுச் செயலாளர் கலைக்கமல், பொருளாளர் எம.எச்.நூர்டீன் ஏற்பாட்டுக்குழு சிரேஷ்ட உறுப்பினர்களான மேமன்கவி, பாத்திமா மைந்தன் மற்றும் ஸ்தாபாக குழு இயக்க உறுப்பினர்கள், நடுவர்கள், போட்டியில் கலந்துகொண்ட கவிஞர்கள், வெற்றிபெற்றவர்கள் அனைவரையும் வாழ்த்தி மகிழ்கிறேன். தொடரட்டும் உங்கள் பணி.

## வசந்தி தயாபரன்

செயலாளர், தமிழ்க் கதைஞர் வட்டம்

உலகமே நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் சிக்குண்டு, மூச்சுத்திணறியபடி இயங்கிக்கொண்டிருக்கின்றது. மனிதஇனமோ, அவநம்பிக்கையின் பிடியில் அகப்பட்டு, ஆற்றுவாரின்றித் தவிக்கின்றது. யாரை யார் தேற்றுவது என்ற வினாவொன்று எல்லோர் மனங்களிலும் தொக்கிநிற்கின்றது.

தலைநகர் கொழும்பில் வேரூன்றித் தழைத்து நிற்கும் வலம்புரி கவிதா வட்ட ஸ்தாபகக் குழு இயக்கமானது, இந்நோய் நிலைமையின் இறுக்கத்தைக் குறைத்து, மக்களுக்கான உள ஆற்றுப்படுத்தலையும் ஆசுவாசத்தையும் வழங்கும் பொறுப்புள்ள பணியில், ஈடுபட்டுள்ளது. அதன் வெளிப்பாடாக, ‘சர்வதேச கவிதைப்போட்டி 2020’ என்ற காத்திரமான இலக்கியச்செயற்பாட்டை அவர்கள் நடத்தி முடித்துள்ளனர். இப்போட்டியை, நமது நாட்டு எல்லைகளைக் கடந்து உலகளாவிய வகையில் ஏற்பாடு செய்தது மட்டுமன்றி, ஸ்தாபகச் செயலாளராக, திறம்படப் பணியாற்றிய, கவியாளுமை கவின்கமல் நினைவாகவும் அதை நடத்தியுள்ளமை மிகவும் பொருத்தப்பாடுடையது ஆகும். இப்போட்டியின் பரிசளிப்பு விழா, வெகுவிரைவில் நடைபெற உள்ளது என்ற செய்தியும் மனதுக்கு உவப்பானதே! ஸ்தாபகக்குழு இயக்கம் - வகவம் அமைப்பினர், இவ்வரும்பெரும் பணி வெற்றிபெற உழைத்தோர். பங்குபற்றியோர், பரிசுபெறுவோர் அனைவரும் பாராட்டுக்குரியவர்களாவர்.

விழா சிறப்பாக நடைபெற மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

கவினுற வாழ்ந்து மறைந்த கவின்கமல்
வாழ்வும் கலை இலக்கியப் பணியும்

டாக்டர் தாஸிம் அகமது
தலைவர் - ஸ்தாபக குழு இயக்கம்,
வலம்புரி கவிதா வட்டம்

## திறப்பு

நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை எனும்
பெருமை உடைத்து இவ்வுலகு

திருக்குறள்- 336 - நிலையாமை

நேற்று இருந்த ஒருவன் இன்று பருஉடல் அளவில் இல்லை என்றாலும் இன்றும் நாளையும் மக்கள் நினைவில் அவன் வாழ்வதைத் தவிர்க்க முடியாது பிறர் மனத்துல் நினைவில் நல்லுணர்வோடு தங்கும் படியாக வாழ்வதுதான் சிறந்த வாழ்க்கை. மக்கள் உள்ளத்தில் வாழத் தக்க பெருமைக்குரியவராக இருக்க வேண்டும் எனும் கருத்தை பெருமை உடைத்து எனும் சொல் மூலம் வள்ளுவர் கூறுகிறார். அவ்வாறான ஒரு வாழ்க்கை வாழ்ந்தவர்தான் இவ்வுலகை விட்டும் பிரிந்த கவின்கமல் இர்ஷாத் கமால்தீன் அவர்கள் ஆவார்கள். இதைத்தான் நீத்தார் பெருமை என நாம் கூறுகிறோம். இர்ஷாத் கமால்தீன் அவர்களின் வாழ்வும் கலைஇலக்கியப் பணி பற்றியும் இக்கட்டுரை விளக்குகிறது.

### பிறப்பும் ஆரம்பக் கல்வியும்

கவின்கமல் எனும் பெயரிலும் இர்ஷாத் கமல்தீன் எனும் பெயரிலும் கலை இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்டவராயிருந்தவர்தான் இர்ஷாத் கமால்தீன் அவர்கள். தம் வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் மிகவும்

மென்மையாக வாழ்ந்து வந்தவர். “நடந்தால் புல்லும் சாகாது” எனச் சொல்வார்களே அந்த சொற்றொடருடன் பொருந்தக் கூடிய வாழ்க்கை வாழ்ந்தவர் இர்ஷாத் கமால்தீன் அவர்கள். அறிந்தும் அறியப்படாததுமான பல்திறப்பட்ட ஆளுமைகளைத் தன்னகத்தே அவர் அடக்கி வைத்திருந்தார்.

இயற்கையாய் அமைந்ததும் வளர்த்துக் கொண்டதுமான ஆளுமைகள் அநேகம் அவரிடம் காணப்பட்டன. இச்சிறப்பு அவருக்கே உரித்தான தனிச்சிறப்பாக அமைந்திருந்தது. அவரது மரணத்தின் பின்னர்தான் பெரும்பாலும் அவருடன் பழகியவர்கள் கூட அவற்றை அறியக் கூடியதாயுமிருந்தது.

மொஹமட் ஒமர்தீன் எனும் இயற்பெயர் கொண்ட இர்ஷாத் கமால்தீன் 16.07.1949ல் கொழும்பு கொம்பனித் தெரு ஜாவா லேனில் வாழ்ந்து வந்த ஒரு நடுத்தர குடும்பத்தில் இரண்டாவது பிள்ளையாகப் பிறந்தார். இவரின் தந்தை பாகிஸ்தான் ஹைதராபாத்தை அடுத்துள்ள நவாப்ஷான் பகுதியின் பிரபல மார்க்க மேதை கமாலுத்தீன் மர்வானியின் பூர்வீகத்தைச் சேர்ந்த மாலுமி அப்துல் ரகுமான் ஆவார். தாயார் பாத்தும்மா பீபீ. இர்ஷாத் கமால்தீனுக்கு ஒரு அண்ணனும் ஒரு தம்பியும் உள்ளனர்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை கொழும்பு கொம்பனித்தெரு அரசினர் கலவன் பாடசாலையில் (தற்போதைய அல் இக்பால் மகளிர் மகாவித்தியாலயம்) ஆரம்பித்தபோதும் இவரின் கல்வித் திறனை கண்டறிந்த அதிபரின் முயற்சியால் மருதானை ஸாஹிராக் கல்லூரியில் சேர்க்கப்பட்டார். அங்கு இவர் 1965வரை கல்வி கற்றார். கல்லூரி வாழ்க்கையின் போது பலத்தரப்பட்ட கலை இலக்கிய நிகழ்வுகளில் கலந்து கொண்டு தனது திறமைகளை வெளிப்படுத்தினார்.

### கலைஇலக்கிய ஈடுபாடு

ஹலாய் மேமன் இனத்தைச் சேர்ந்த இவரது தாய்மொழி உருது. தமிழ், சிங்களம், ஆங்கிலம், ஹிந்தி, மலாய், அரபு

ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்த இவரது பூர்வீகம் மர்வானி இனமாகும். (மர்வானி ஜெருசலேத்தின் பூர்வீகக் குடிகள். இவ்வினம் சவூதி அரேபியாவிலும் குடிகொண்டிருந்தது.) கவின்கமல் தனது பன்மொழிப் புலமையைப் பற்றி பெரிதாக அலட்டிக்கொள்ளாத ஒருவராய் வாழ்ந்தார். ஆனால் அதை அடையாளம் கண்டுகொண்டவர்கள் அவரது பன்மொழிப் புலமையை பயன்படுத்தி பல நன்மைகளைப் பெற்றுக்கொண்டனர். அவற்றின் வெளிப்பாடாக பல ஆக்கங்கள் வெளிவந்தன. பயனாக பன்மொழி ஆற்றலின் மூலம் தமிழுக்கு பல நூல்கள் கிடைத்தன. அவற்றுள் ஆய்வு நூல்களும் அடங்கும்.

தமிழ்மொழியின் மீது இவர் வைத்திருந்த அபரிதமான பற்றுதலை இனம் கண்ட இவரின் ஆசான் மர்ஹூம் சிந்தகி ஹூசைன் அவர்கள் இவருக்குத் தமிழ் மொழி, இலக்கணம், இலக்கியம் ஆகியவற்றைத் கற்றுக் கொடுத்து மேம்படுத்தினார். அதே போன்று ஆசான் மர்ஹூம் எம்.ஏ. முஹம்மத் அவர்கள் சிங்கள மொழியில் இவர் நன்கு தேர்ச்சி பெறும் அளவுக்கு கற்றுக் கொடுத்ததோடு இவரை வானொலி நிகழ்ச்சிகளில் பங்கு பற்றச் செய்யும் நோக்கில், மர்ஹூம் மௌலவி இஸட். எல்.எம். முஹம்மத், மர்ஹூம் குத்தூஸ் ஆகியோருக்கு அறிமுகம் செய்து அன்றைய வானொலி முஸ்லிம் (சிறுவர்) நிகழ்ச்சிகளிலும் பங்கு பெறச் செய்தார். இவரது குரலையும் உச்சரிப்புத் திறமைகளையும் கண்டறிந்த அன்றைய அறிவிப்பாளர் ஜாம்பவான்களான திரு. சரா இமானுவல், திரு. சிவஞானம் (வானொலி மாமா) மற்றும் திரு. இ. அம்பிகைபாகன் ஆகியோர் வானொலி தமிழ் நிகழ்ச்சிகளிலும் இவரைப் பங்கு பெறச் செய்தனர். அது முதல் பணி ஓய்வு பெறும்வரை இவர் இலங்கை வானொலியின் தேர்வு செய்யப்பட்ட கலைஞராக இருந்து வந்தார். பல மொழிகளைக் கற்று பாண்டித்தியம் பெற ஆர்வம் கொண்ட இவர் வட இந்தியா ஜெய்பூர் பல்கலைக் கழகத்தில் இணைந்து பட்டப்படிப்பை மேற்கொண்டு மொழியியற்றுறையில் பி.ஏ. பட்டம் பெற்றார்.

1960களில் தனது பதினோராவது வயதில் இலங்கை வானொலி நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார். பாடசாலைப் பருவத்திலேயே மற்ற மாணவர்களையும் கலை இலங்கியத்துறையில் ஈடுபடவைக்கும் நன்னோக்கில் தனது நண்பர்களான நஜ்முல் ஹுசைன் மற்றும் எம்.எஸ்.எம். ஜின்னா ஆகியோருடன் இணைந்து “மதிவளர் மன்றம்” எனும் மாணவ கலை இலக்கிய மன்றத்தை உருவாக்கினார். 1974ல் தனது நண்பன் எஸ்.ஐ. நாகூர் கனியின் உதவியுடன், அன்றைய தேசியப் பத்திரிகைகளில் ஒன்றான “ஈழமணி” பத்திரிகையில் ‘நந்தினி’ என்ற சிறகதையை எழுதி எழுத்துத் துறையில் கால் பதித்தார். அதுமுதல் இலங்கையின் அனைத்துப் பத்திரிகைகளிலும் ‘கவின்கமல்’ எனும் புனை பெயரில் சிறுகதை, நாவல், உருவகக் கதை, கவிதை என இவரது பல ஆக்கங்கள் வெளிவந்தன. 1978ல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் தமிழ் சேவைகளில் கலந்துகொண்டு நிகழ்ச்சிகளுக்கு குரல்கொடுப்பவராக இருந்தார். அதே ஆண்டில் இவர் எழுதிய தனிக்கவிதைகளும், உருவகக்கதைகளும் தினகரனில் வெளிவந்தன. ரமழான் சிந்தனைகளும் எழுதினார்.

## வலம்புரி கவிதாவட்டம் ஸ்தாபிதம் - முன்னோடி நிகழ்வு

1980களில் கலைக்கமலுடன் சேர்ந்து கமல் பிரதர் பிரதர்ஸ் பப்பிளிகேஷன் எனும் பெயரில் கமலம் சஞ்சிகை வெளிவந்தது. அத்துடன் எழுத்தாளர்களின் நூல்களையும் வெளியிட்டு வந்தார். இதே காலகட்டத்தில் கொம்பனித்தெரு சேர்ச் வீதியில் அமைந்த தாஸிம் அகமதுவின் தனியார் மருத்துவமனையில் வைத்து டாக்டர் தாஸிம் அகமதுடனான தொடர்பு ஏற்பட்டது. அதன் பயனாக எஸ்.ஏ. நாகூர் கனியுடனான சந்திப்பும் ஏற்படுத்தப்பட்டது. இலங்கைக் கவிஞர்களுக்கான ஓர் அமைப்பை உருவாக்கும் நோக்கில் டாக்டர்.தாஸிம் அகமது, டாக்டர். நூர்தீன் மற்றும் எஸ்.ஐ. நாகூர்கனி, கலைக்கமல் ஆகியோருடன் இணைந்து ‘வலம்புரி கவிதா வட்டம்’ (வகவம்) எனும் அமைப்பை ஸ்தாபித்து அதன்

முதலாவது செயலாளராகவும் பணியாற்றினார். வலம்புரி கவிதா வட்டம் 1981ம் ஆண்டு நவம்பர் மாதம் 20ம் திகதி ஒரு வெள்ளிக்கிழமை ஸ்தாபிக்கப்பட்டது.

கவிஞர் இர்ஷாத் கமால்தீன் அவர்கள் செயலாளராக இருந்து வகவத்துக்கு ஆற்றிய பணிகள் அளப்பரியன. வகவச் செயல்பாடுகளில் அவர் காட்டிய ஆர்வமும் ஆற்றிய பணிகளும் காலத்தால் மறக்கப்பட முடியாதவையாகும். நோன்மதி தினந்தோறும் திறந்த கவியரங்குகளை ஏற்பாடு செய்வது கவிஞர்களுடனான தொடர்பு என்பவற்றுடன் ஒவ்வொரு கவியரங்குக்கும் சிறப்பதிதிகளை வரவழைத்தல், புதிய புதிய கவிஞர்கள் அறிமுகம், கவிதை நூல் விமர்சனம் போன்ற செயற்பாடுகளை எவ்வித அயர்வும் இன்றித் திறம்பட செய்வதில் வல்லவராக இருந்தார்.

### வலம்புரி கவிதா வட்ட செயற்பாடுகள்

ஒவ்வொரு கவியரங்கிற்கும் புதிதுபுதிதான பிரமுகர்கள் சிறப்பதிதிகளாக வரவழைக்கப்பட்டு கவியரங்கில் கலந்து கொண்டனர். இளங்கீரன் சுபைர், முருகையன் மற்றும் தமிழ் நாட்டிலிருந்து எஸ். ராமகிருஷ்ணன், சுபமங்களா ஆசிரியர் கோமல் சுவாமிநாதன், அழகாபுரி அழகப்பன், அருணா சுந்தர ராஜன், ரஷ்யாவில் இருந்து விதாலி பூர்னிகா போன்ற தமிழ் அறிஞர்களும் தமிழ்க் கவிஞர்களும், மூத்த படைப்பாளிகளும், வகவக் கவியரங்குகளில் கலந்து கொண்டனர். நம்நாட்டு மூத்த கவிஞர்களும் படைப்பாளிகளும் பத்திரிகையாளர்களும் சமூக பிரமுகர்களும் கூட பௌர்ணமி தோறும் வரவழைக்கப்பட்டதன் மூலம் வலம்புரி கவிதா வட்டம் தலைநகரில் பேசப்படும் ஓர் அமைப்பாக பிரவாகம் பெற்றது. தாஸிம் அகமது, மேமன்கவி, ஈழகணேஸ், கலாவிஸ்வநாதன், எஸ்.ஏ. நாகூர்கனி ஆகியோருடன் வலம்புரி கவிதாவட்ட கவிஞர்களும் இப்பணிக்கு பெரிதும் உதவினர். ஓரிரு பிராந்திய கவியரங்குகளும் நடைபெற ஏற்பாடாகி தவிர்க்க முடியாத காரணங்களால் கவிஞர்கள் ஒன்றுகூடல் நிகழ்வாக அவை மாற்றம் பெற்ற பதிவுகளும் உண்டு.

## வலம்புரி கவிதா வட்டத்தின் முதலாவது ஆண்டு விழா

1982ஆம் ஆண்டு முதலாவது ஆண்டு விழாவின் நிமித்தம் தேசிய ரீதியில் தமிழ்க் கவிதைப் போட்டியொன்று நடத்தி வைக்கப்பட்டது.

இக்கவிதைப் போட்டியை நடத்தி வைப்பதற்காக செயலாளர் கவின்கமல் சிரேஷ்ட ஸ்தாபக உறுப்பினர் எஸ்.ஐ. நாகூர்கனி, தாஸிம் அகமது ஆகியோருடன் அல்அசூமத், மற்றும் நண்பர்கள் இரவு பகலாக ஈடுபட்டு தமது முழுக்கவனத்தையும் செலுத்தி இவ்வாண்டு விழாவை ஏற்பாடு செய்தனர்.

அகில இலங்கை ரீதியாக ஏராளமான தமிழ்க் கவிஞர்கள் போட்டியில் பங்குபற்றினர். நடுவர்கள் மூலம் 16 கவிதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அவை பூபாளம் கவிதை இதழில் பிரசுரமாகின. இக்கால கட்டத்தில் வகவத்தின் மூத்த உறுப்பினர்கள் ஏனைய கவிஞர்களுடன் குடும்ப உறுப்பினர்கள் போல் தொடர்புகளை வைத்து கொண்டிருந்தனர்.

வகவம் ஒரு குடும்பமாக இருந்தது. இந்நிலையில் எந்த பேதமும் பாராமல் வலம்புரி கவிதா வட்டம் இயங்கி வந்தது. இச்செயல்பாடுகளுக்கான செலவுகளை வகவ ஸ்தாபக உறுப்பினர்களே முன்வந்து ஏற்றுக் கொண்டனர். இதற்கான நிதி சேகரிப்பு உறுப்பினர்களிடமிருந்தும் கவிஞர்களிடமிருந்தும் பெற்றுக் கொள்வது கண்டிப்பாக தவிர்க்கப்பட்டு வந்தது.

## பரிசளிப்பு விழாவும், ஆண்டுவிழாவும்

28.12.1982 அன்று கொள்ளுப்பிட்டி கல்விக் கூட்டுறவு நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. கவிதைப் போட்டியில் வெற்றி பெற்ற முதலாவது கவிதைக்கு வலம்புரி விருதும் சான்றிதழும் வழங்கி வைக்கப்பட்டது. அந்த பெருமைக்குரியவர் மறைந்த மாபெரும் கவிஞர் பாண்டியூரன் ஆவார். தெரிவு செய்யப்பட்ட ஏனைய கவிதைகளுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மூன்று அமர்வுகளாக நடைபெற்ற ஆண்டு விழா முதல் அமர்வில் கொக்கூர் கிழானின் யாப்பியல் நூல் வெளியீடு தினகரன் ஆசிரியர் ஆர். சிவகுருநாதன் தலைமையிலும், இரண்டாவது அமர்வு அல்அசூமத்தின் புலாராப் பொழுதுகள் குறுங்கவிதைக் காவியம் நூல் வெளியீடு கலாநிதி கே.எஸ். நடராஜா தலைமையிலும், மூன்றாவது அமர்வு புலவர்மணி ஆ.மு. செஷிபுத்தீன் பிரதம அதிதியாக கலந்து கொள்ள தாஸிம் அகமது தலைமையில் பரிசளிப்பு அமர்வாகவும் நடைபெற்றது. மண்டபம் நிறைந்த ஆர்வலர்கள் மத்தியில் இம்மூன்று அமர்வுகளும் சிறப்புப் பெற்றன. தமிழ்த் தினசரிகளும், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனமும் இந்நிகழ்வுகளின் செய்திகளை வெளியிட்டும், ஒலிபரப்பியும் எம்மை ஊக்குவித்தன. மேற்குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் அனைத்திற்கும் அச்சாணியாய் நின்று அயராது உழைத்தவர் கவிஞர் கவின் கமல் எனும் இர்ஷாத் கமால்தீன் ஆவார் எனக் கூறுவதில் எந்தவித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை என்றால் அது மிகையாகாது.

### பூபாளம் கவிதை சஞ்சிகையும் ஏனைய நூல்கள் வெளியீடும்

1982ல் கவிஞர் அல் அஸுமத் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த, இலங்கையின் தமிழ் கவிஞர்களுக்கான ஒரேயொரு காலாண்டு கவிதை இதழான 'பூபாளம்' சஞ்சிகையின் இணையாசிரியராக கவின் கமல் பணிபுரிந்தார். அத்தோடு இலங்கையில் சீர்திருத்தத் தமிழில் முதன் முறையாக யாக்கப்பட்டதும் தொடர் புதுக் கவிதையின் மூலம் ஒரு நாவலைக் கொண்டதுமான தனது "மழையில்லா மேகம்" எனும் கவிதை நூலையும் வெளியிட்டார். அதனைத் தொடர்ந்து, தனது வெளியீட்டகத்தின் வாயிலாக தனது சமகால கவிஞர்களான அல் அஸுமத்தின் 'புலராப் பொழுதுகள்', டாக்டர் தாஸிம் அகமதுவின் 'வெள்ளையில் ஒரு புள்ளி' கலைக்கமலின் 'ஓடக் குழல்', ஈழகணேஷின் 'பசிக்குள் பசி' ஆகிய கவிதை நூல்களைப் பிரசுரித்து வெளியிட்டார். அன்று நாட்டில் ஏற்பட்ட

அசாதாரண சூழ்நிலை காரணமாக இப்பணி தொடராமல் தடைப்பட்டது.

### மழையில்லா மேகம் வெளியீடு

1982களில் 'மழையில்லா மேகம்' புதுக் கவிதைக் காவியம் கொழும்பு தப்ரபேன் ஹோட்டலில் வெளியிட்டு வைக்கப்பட்டது. கே.எஸ். சிவகுமாரன், எம்.எச்.எம். ஷம்ஸ் தாஸிம் அகமது நாகூர் கனி ஆகியோர் மழையில்லா மேகம் தொடர்பான விமர்சனங்கள் எழுதினர். மழையில்லா மேகம் நெடுங்கவிதையின் சிறப்புக்கள்.

* **சீர்திருத்தத் தமிழில் முதன் முதலில் இலங்கையில் வெளியான நூல்**
* **கவின்கமல் கைகளினால் அச்சுக் கோர்க்கப்பட்டு அட்டைப்படம் வடிவமைக்கப்பட்டு தனிமனித உழைப்பில் வெளியிடப்பட்ட நூல்**
* **படிமக்குறியீடுகள் கொண்டு நகர்த்திச் செல்லப்படும் முதன் முதலில் வெளியான நெடுங்கவிதைக் காவியம்**

1982ல் இலங்கை ரூபவாஹிணிக் கூட்டுத்தாபனத்தில் அல்ஹாஜ் ரஷீத் எம். ஹபீழ் அவர்களின் சிபாரிசினால் முதலாவது முழுநேர கணினி தமிழ் (முஸ்லிம்) எழுத்தோவியராக நியமனம் பெற்றார். அத்தோடு அல்ஹாஜ் அஹ்மத் முனவ்வர் அவர்களின் உதவியோடு 'ஊடுருவல்' வானொலி முஸ்லிம் நிகழ்ச்சியின் தயாரிப்பாளராகவும் பணிபுரிந்தார். இந்நிகழ்ச்சியின் மூலம் பல வானொலி முஸ்லிம் கலைஞர்களுக்குப் பயிற்சியளித்து உருவாக்கினார். 2004ல் பணி ஓய்வு பெற்றதன் பின், கடுமையாக நோய்வாய்ப்பட்டதன் காரணமாக இத்துறைகளிலிருந்து ஒதுங்கிக் கொண்டார். இருப்பினும் மரணிக்கும்வரை தனது கலை இலக்கிய சேவைகளை திரைக்குப் பின்னாலிருந்து செய்து வந்தார்.

23.07.1983ல் புதுக்கடையைச் சேர்ந்த தூபத்துல் கரீமாவை திருமணம் செய்தார். திருமணத்தில் என்னுடன் கலை இலக்கிய நண்பர்கள் அநேகர் கலந்து

கொண்டனர். திருமணத்தின் மூலமாக அவருக்கு இரண்டு பெண்பிள்ளைகளும் ஒரு ஆண் மகனும் கிடைத்தனர். மகன் 02.01.2013 அன்று அகால மரணமடைந்தார். இரண்டாவது மகளான நகீதா ஷப்னம் குடும்பத்துடன் கிராண்பாசில் மரணிக்கும்வரை வாழ்ந்து வந்தார்.

**விருதுகளும் கௌரவிப்புகளும்**

2002இல் உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டில் விருதும் பணமுடிப்பும் அளித்து கௌரவிக்கப்பட்டார்.

2003இல் அஸீஸ் மன்றம் கலாவாரிதி பட்டம் கொடுத்து கௌரவித்தது.

2003இல் பணி ஓய்வு பெற்றதன் பயனாக கிடைத்த நிதியைக் கெண்டு மரணிக்கும் வரை வாழ்ந்து வந்த வீட்டை கொள்வனவு செய்தார்.

2004ல் ஸ்ரீலங்கா முஸ்லிம் கலைஞர் கவுன்சில் விருதும் பொற்கிழியும் வழங்கி கௌரவித்தது.

2005ல் அறிவியல் துறையில் முஸ்லிம் முன்னோடிகள் எனும் ஆய்வு நூல் எழுதி வெளியிட்டார். இந்நூல் தமிழ்நாடு கன்னிமாரா நூலகத்தில் உசாத்துணை நூலாக வைக்கப்பட்டுள்ளது. இந்நூல் ஹாஜி ஷாகுல் ஹமீது புக் டிப்போவினர் மூலம் வெளியீடு செய்து வைக்கப்பட்டதாகும் 14.09.2008இல் அவரது அன்பு மனைவி காலமானார்.

2012இல் தாஸிம் அகமதுவின் கண்திறவாய் அறிமுக விழாவின் போது விருதும் பொற்கிழியும் அளித்துக் கௌரவிக்கப்பட்டார்.

16.12.2013ல் கவிமணி நஜ்முல் ஹுஸைன் தலைவராகவும் இளநெஞ்சன் முர்ஷிதீன் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்ட வகவம் மீள் ஆரம்ப வைபவத்தில் வைத்து ஸ்தாபக உறுப்பினர்கள் ஐவர் கௌரவத்தின்போது கவின்கமல் வகவக் கவிஞர்களால் பொற்கிழி வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

2015ம் ஆண்டு அரச கலாபூஷண விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

2016ல் இஸ்லாமிய கிலாபத் ஆட்சியாளர்கள் எனும் நூலை எழுதி வெளியிட்டார். இந்நூல் அமெரிக்கன் நூலகம் ஒன்றினால் கொள்வனவு செய்யப்பட்டது.

அதன் பின்னர் நோய்வாய்ப்பட்ட நிலையில் 2016 டிசம்பர் மாதம் 10ம் திகதி காலமானார்.

1960களில் இருந்து தனது இறுதி மூச்சுவரை கலை இலக்கியப் பணிக்காக வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்த ஒரு பெரும் ஆளுமையின் மறைவு நிரப்ப முடியாத ஒரு வெற்றிடத்தைத் தோற்றுவித்துள்ளது.

அவர் விட்டுச் சென்றுள்ள மீதமுள்ள பணிகளை நிறைவேற்றி வைப்பது அவரது கலை இலக்கிய நண்பர்களான எம் அனைவரினதும் கடனாகும்.

வலம்புரி கவிதா வட்டம் ஸ்தாபித்த 1981 ம் ஆண்டு தொடக்கம் அவரது மறைவு வரை அவர் எம்முடன் தொடர்பிலிருந்து எமக்கு அரும்பெரும் ஆலோசனைகளை வழங்கிவந்தார்

கவின்கமல் கவிதை இலக்கியத்தின் பல படித்தரங்களிலான செயற்பாடுகளில் ஈடுபாடு கொண்டு அர்ப்பணிப்புடன் செயலாற்றிய ஓர் தன்னலம் கருதா ஆளுமையாகும்.

எல்லா விமர்சனங்களையும் எதிர்கொண்டு கவிதை இலக்கிய மேம்பாட்டுக்காக மட்டுமன்றி கவிதை நூல்கள் வெளியீடு, ஊடகத்துறையில் ஆழ்ந்த ஈடுபாடு, பன்மொழிப் பயிற்சி, பேச்சாற்றல், நிகழ்ச்சிகளை ஆவணப்படுத்துவதில் சாதுரியம் போன்ற இன்னோரன்ன ஆளுமைகளைத் தன்னகத்தே கொண்டிருந்த ஒரு செயல் வீரராக கவின்கமலை நாம் காணுகிறோம்.

வலம்புரி கவிதா வட்டம் இன்றுவரை கொண்டாடும் வகவம் சின்னம்அடிப்படைக் கொள்கைகோட்பாடுகள் “தரணியெலாம் எங்கள் தாயகமாம்” எனும் மகுடவாசகம் போன்றவை

கவின்கமல் எண்ணக்கருவின் வெளிப்பாடாகும் என்பதை நன்றியுடன் கூறிக்கொள்வதில் நாம் பெருமையடைகிறோம்.

'வகவம்' என்று செல்லமாக அழைக்கப்படும் சுருக்கப் பெயரையும் அவரே அறிமுகப்படுத்தினார். அவர் ஆற்றிச் சென்றுள்ள அவ்வாறான அரும் பணிகள் அனைத்தையும் நினைவுகூரும் வகையில் அவர் நினைவாக" கவின்கமல் ஞாபகார்த்த சர்வதேச கவிதைப்போட்டி அறிவிக்கப்பட்டு அதன் பரிசளிப்பு விழாவை ஸ்தாபக குழு இயக்கம் வகவம் நடத்த முன்வந்தது.

அவர் விட்டுச்சென்றுள்ள பணிகளை தொடர்ந்தும் மேற்கொள்வதற்கு ஸ்தாபக குழு இயக்கம் திடசங்கற்பம் பூண்டுள்ளது.தேசியரீதியிலும்சர்வதேசரீதியிலும்வலம்புரிகவிதா வட்டம்பிரபலயம் அடைய முழு முதல் காரணமாயிருந்த மறைந்த கவின்கமல் அவர்கள் ஞாபகார்த்தமாக இப்பரிசளிப்பு விழாவை நடத்திவைப்பதில் ஸ்தாபக குழு இயக்கம் வகவம் பெருமகிழ்ச்சியடைகிறது.

**தேனீயாய்த் தினம்தினம் உழைத்தவனே**
**ஞானம் உன்னிடம் மறைந்து இருந்தது**
**ஏனோ எமக்கெல்லாம் இது புரியாமல் இருந்தது**
**ஆனாலும் அறிந்து கொண்டோம்**
**நீ ஒரு பெரும் ஆளுமை என்று**
**பேனாவை எடுத்தால் பிழையின்றித் தமிழ்**
**தானாய் வந்து விழும் நீ எழுதும் தாளில்**
**போனாயா எமைவிட்டும் என்பதெல்லாம் பொய்யே**
**வாணாள் முழுவதும் எம்முடன்**
**நீ வாழ்வாய் என்பது மெய்யே**
**ஏனெனிலோ உனது எழுத்தும் பணியும் என்றென்றும்**
**காணாமல் போகாது உன் பெயர் காக்கும் நிச்சயம்**

'(குறிப்பு–இக்கட்டுரையின் முக்கிய பகுதிகள் "படிகள்" பருவ இதழ் 38 ல் வெளிவந்தவையாகும். நன்றி "படிகள்' )

## கலைக்கமல்

(செயலாளர்-ஸ்தாபக குழு இயக்கம்-வகவம்)

இன்று நினைத்தாலும் எண்ணமெல்லாம் இனிக்கின்றது1.976 கொம்பனித்தெரு மீலாத் மேடையில் பாடும்போது ஓர் அறிவிப்பாளராக ஒமர்தீனை(கவின்கமல்) சந்தித்தேன். வேர்போல நட்பு வளர்ந்து விருட்சமானது. நேசமிகு தாஸிம் அகமதுவின் திருமுகமும் அப்போதுதான் அறிமுகம். எங்கள் காட்டில் செழிப்பான கவிதை மழை பொழிந்த குளிர்ச்சியான காலமது.ஒமர்தீன் "கவின்கமல்"ஜமால்தீன் "கலைக்கமல்" கமல் சகோதரர்களாக இணைந்து"கமலம்"கவிதை மாத இதழ் கமழ்ந்தது. நான் "ஓடக்குழல்" புதுக்கவி - கதையை தினகரன் "இதய ராகங்களில்"ஆறுமாத காலம் எழுதியதை புத்தகமாக வெளியிட்ட முத்தான இதயம் படைத்த இனியவர் கவின்கமல். டாக்டர்.கவிஞர் தாஸிம் அகமதுவின் இலட்சிய எண்ணத்தில் 1981 களில் மலர்ந்தது"வலம்புரி கவிதா வாட்டம்".நாம் மூவரும் டாக்டர் கவிஞர் நூர்டீனையும்"காதிப்புல் ஹக்"நண்பர் எஸ்.ஐ.நாகூர் கனியையும் இணைத்துக்கொண்டு செயற்பட்டு வந்தோம். இன்று ஸ்தாபக செயலாளர் கவின்கமல் நினைவாக சர்வதேச கவிதை போட்டியின் பரிசளிப்பு விழாவை நாம் நடத்துவது பேருவகை தருகிறது.இந்த அரிய கவிதா பணிக்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றிய ஸ்தாபகத் தலைவர் டாக்டர். "கலாபூஷணம்"தாஸிம் அகமது வகவம் சிரேஷ்ட உறுப்பினரும் ஆலோசகருமான"கலாபூஷணம்"மேமன்கவி வெற்றிக்கு வித்திட்ட வித்தகர்களாக முத்திரை பதிக்கிறார்கள்.இந்தக் கூட்டு முயற்சி எதிர்காலத்திலும் புதுமைகளைக் காட்டி நிற்கும் என்று திடமாக நம்புகிறேன்.

## டாக்டர்.எம்.எச்.நூர்டீன்

பொருளாளர் ஸ்தாபக குழு இயக்கம் - வகவம்.

**நா**ன் பிறந்து வளர்ந்த கல்முனையில் ஊற்றெடுத்து ஈடுபாட்டுடன் இருந்துவந்த இலக்கியப் பிரவாகம் மருத்துவ பட்டப்படிப்புக்காக கொழும்புக்கு வந்தபோது இடை நிறுத்தப் பட்டுவிடுமோ என்று எண்ணிக்கொண்டிருந்த வேளையில் டாக்டர் தாஸிம் அகமது அவர்களின் தொடர்பு மூலம் வலம்புரி கவிதா வட்டம் ஸ்தாபிக்கப்பட்ட 1981களில் கவின்கமலின் அறிமுகம் கிடைத்தது.நானும் வகவம் ஸ்தாபகர்கள் ஐவரில் ஒருவராக இணைந்துகொண்டேன்.

வலம்புரி கவிதா வட்டம் கவிதை இலக்கியத்துக்கான பல நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்கிய செயற்பாடுகளில் முக்கிய இடம் வகித்தது மாதந்தோறும் நடைபெற்றுவந்த திறந்தவெளி பௌர்ணமிக்கவியரங்குகளாகும். கவியரங்குகளை மாதா மாதம் முன்னின்று ஏற்பாடு செய்வதில் ஸ்தாபக பொதுச் செயலாளர் மறைந்த கவின்கமல் அவர்களின் பங்களிப்பு வியக்கத் தகுந்ததாயிருந்தது. எதுவித பலனும் எதிர்பாராது கவின்கமல் தமிழ்க் கவிதைப் பட்டறை நடத்துவதில் தனது அயராத பெரும் பங்களிப்பை வழங்கி வந்ததனால்தான் இன்று சர்வதேச கவிதைப் போட்டியொன்றை அவரது ஞாபகார்த்தமாக நடத்தி இன்று பரிசளிப்பு விழா காண்கிறது.

வகவம் ஸ்தாபக குழு இயக்கம் 40 வருட கால வரலாறு கொண்ட வலம்புரி கவிதா வட்டம் கவின்கமல் சூட்டிய”தரணியெலாம் எங்கள் தாயகமாம் எனும் மகுடம்

தாங்கி நடத்தும் இரண்டாவது கவிதைப்போட்டி பரிசளிப்பு விழா இதுவாகும்.

இப்பரிசளிப்பு விழாவைத் தொடர்ந்து மேலும் பல காலத்துக்கேற்றவாறான நிகழ்வுகளை ஸ்தாபக குழு இயக்கம் (வகவம்)நடத்தத் தீர்மானித்துள்ளது.கவின்கமல் ஞாபகார்த்த சர்வதேச கவிதைப்போட்டி பரிசளிப்பு விழா வெற்றிபெற நிதி உதவி வழங்கிய வள்ளல் பெருமக்களுக்கும் ஆலோசகர்களாக இருந்து செயற்பட்ட கலாபூஷணம் மேமன்கவி "கவிதை கேளுங்கள்"நிறுவனர் பாத்திமாமைந்தன் ஆகியோருக்கும் அனைத்து பத்திரிகை இலத்திரனியல் ஊடகங்களுக்கும் எமது இதயபூர்வ நன்றியைத்தெரிவித்துக் கொள்கிறோம்.

## பாத்திமா மைந்தன்

உறுப்பினர் ஸ்தாபக குழு இயக்கம் - வகவம்.

இயந்திர மனிதன், நேர முகாமைத்துவம் போன்ற சொல்லாடல்கள் எதுவும் பெரிதாக பேசப்படாத ஒரு காலகட்டத்தில், அவ்விதமான ஒரு நடமாடும் உதாரண புருஷ ராக நான் கண்டுணர்ந்த ஒருவரே காலஞ்சென்ற இர்ஷாத் கமால்தீன் எனப்படும் வலம்புரி கவிதா வட்டம் - வகவத்தின் ஸ்தாபக செயலாளர் கவிஞர் கவின்கமல் அவர்களாவார்.

இன்று அவரது பெயரிலான ஞாபகார்த்த சர்வதேச கவிதைப் போட்டி சிறப்பு மலரில் அன்னார் பற்றிய என் கருத்துக்களையும் வெளியிடக் கிடைத்தமைக்கு முதலில் இறைவனுக்கும் அடுத்ததாக என்றுமென் பெருமதிப்புக்குரிய வகவ ஸ்தாபகக் குழுவினருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

எந்தவொரு அமைப்பும் துடிப்புடன் இயங்குதற்கும், தன் பயணப்பாதையில் வெற்றிகரமாக முன்செல்லவும் பின்நின்றுழைக்கும் இயங்குவிசை போன்றவர் அதன் செயலாளராவார். அந்த வகையில் வலம்புரி கவிதா வட்டம் எனும் வகவம் 1981களில் தலைநகரில் தோற்றம்பெறுவதற்கென, அதற்கும் முன்பிருந்தே முன்நின்றுழைத்த முன்னோடி மனிதர் கவின்கமல்.

அப்போது தொடங்கி வகவம் தோற்றுவிக்கப்பட்ட பின்னரும் இறுதிவரை அதன் வளர்ச்சிக்கென அல்லும்

பகலும் அயராதுழைத்த அர்த்தக் கனதி பொதிந்த உண்மைச் செயல்வீரர் அவராவார்.

இப்போதுள்ளது போன்ற வசதிகளெதையும் நினைத்துப் பார்க்கவும் முடியாததொரு அந்நாளைய கஷ்டஜீவன காலகட்டத்திலும் வகவக் கவியரங்கம் நடைபெறும் நோன்மதி தினத்துக்கு ஒரு வாரத்துக்கு முன்பே, அதற்கான அறிவித்தல்களை அஞ்சல் அட்டைகள் மூலம் அதன் கவிஞர்கள், ஆர்வலர்கள், அபிமானிகளுக்கு அறியத்தருவது முதல், கவியரங்கம் நடந்து முடிந்த பிறகு வரை தொடர்ந்தும் அவர் உழைத்த வேகம் பிரமிப்புக்கும் போற்றுதலுக்கும் உரியதாகும்.

அப்போதெல்லாம் வகவ உறுப்பினர்கள், ஆர்வலர்கள், அபிமானிகளிடம் கூட இதன் பொருளாதாரச் சுமையை பகிர்ந்துகொள்ளத் தயங்கிய வகவ ஸ்தாபகர்கள தொடர்ச்சியான வகவத்தின் செயல்பாட்டுச் செலவினங்களை தங்களுக்குள் மட்டுமே வைத்துக்கொண்டு நடத்தி வந்த சூழ்நிலையிலும் சிலநேரங்களில் அவர்களுக்குக் கூட இடமளிக்க எண்ணாது தனது கைப்பணத்திலிருந்தும் சமாளித்து கொண்டு, பொறுப்புணர்வுள்ள ஒரு செயலாளர் என்ற வார்த்தைக்கு பழுதுநேராமல் பங்களிப்பு செய்த பரோபகாரியுமாவார் அவர்.

அப்படியான ஒருவரின் மறைவுக்குப்பின், அவரது நினைவுநாளில் அவரது சகபாடிகளான ஸ்தாபகக் குழுவால் இப்படியானதொரு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது முற்றிலும் நியாயபூர்வமான ஒன்றே என்பதில் கிஞ்சிற்றும் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

‘தனக்குதவி செய்த மனிதனுக்கு நன்றிகூறாதவன் தன்னைப் படைத்த இறைவனுக்கும் நன்றியுள்ளவனாக இருக்கமாட்டான்’ எனக்கூறும் இறைவிதிப் பிரகாரம்,

ஒருவகையில் இதை அவரது அந்நாளைய உழைப்புக்கான கௌரவ மரியாதை நன்றிகூறல் நிகழ்வாகவும் நான் காண்கிறேன்

அந்தக் காலங்களில் வகவத்தின் செயலாளர் நாயகமாக எனக்கு அறிமுகமான கவின்கமல் அவர்களை ஒரு கவிஞராக வரைகலை வல்லுனராக, வானொலி நாடக நடிகராக, அச்சுக்கோர்ப்பு முதல் அதுசார் அச்சக அனுபவசாலியாக, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் மொழிமாற்று எழுத்தணியாளராக என்றெல்லாம் பன்முக சிறப்பாற்றல்களைத் தன்னகத்தே கொண்டிருந்த முதிர்ந்த அனுபவங்களின் தொகுப்பாகவும் கொள்ளலாம்.

இந்த நாளில் அவரது ஞாபகங்களை கௌரவிக்கும் முகமாக வகவ ஸ்தாபகக் குழுவினரால் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்நிகழ்வு இனிவரும் காலங்களிலும் தொடரவேண்டுமென நான் ஆசிக்கிறேன.

அதற்கான உடல், உளவலிமை உள்ளிட்ட சகலவிதமான வசதி வாய்ப்புக்களையும், காலநேர வர்த்தமான வளங்களையும், சாதக சாத்தியங்களையும் வகவ ஸ்தாபகத் தலைவர் டொக்டர் தாஸிம் அகமது அவர்கள் உள்ளிட்ட ஸ்தாபகர்களுக்கும் அனைவருக்குமாக பேரருளாளன் வல்ல அல்லாஹ்தான் தந்தருள வேண்டுமென ஆழ்மனதிருந்து பிரார்த்திக்கின்றேன்.இன்றைய விழாநாயகர் சகோதரர் காலஞ்சென்ற (மர்ஹூம்) இர்ஷாத் கமால்தீன் கவின்கமல் அவர்களது காரியங்கள், கடமைகள், சேவைகளை பொருந்திக்கொண்டு எல்லாம் வல்ல இறைவன் அவரது மண்ணறை வாழ்வையும், மறுமை வாழ்வையும் அவருக்கு இலேசாக்கிக் கொடுத்து, மேலான சுவர்க்கவாதிகளில் ஒருவராகவும் அவரை ஆக்கி வைப்பானாக.

# கவின்கமல் சர்வதேச கவிதைப் போட்டிக்கான நடுவர்குழு உவந்தளித்த தகவுரை

**வ**லம்புரி கவிதா வட்டம்(வகவம்) 1982 ல் நடத்திய முதலாவது கவிதைப் போட்டியில் நான் பங்குபற்றிஓர் ஆறுதல் பரிசு பெற்றிருந்தேன்.அதே வகவம் ஸ்தாபக குழு இயக்கம் 2020 ல் நடத்திய கவின்கமல் ஞாபகார்த்த சர்வதேச கவிதைப் போட்டியில் நான் நடுவர் குழுவில் ஒருவனாக அமைந்தமை எனக்குமகிழ்சசியைத் தருகிறது காப்பியக்கோ ஜின்னாஹ் சரீபுத்தீன் கவிஞர் வதிரி சி.ரவீந்திரன் ஆகியோருடன் நானும் நடுவராக இருந்து செயற்பட்டேன் நூற்றுக்கு மேற்பட்ட கவிதைகள் போட்டிக்கு கிடைக்கப் பெற்றிருந்தன இரண்டாவது தெரிவில் எண்பது கவிதைகளும் மூன்றாவது தெரிவில் நாற்பத்தெட்டு கவிதைகளும் நடுவர்கள் மூவரினாலும் தேர்ந்தெடுக்கப்பட்டன கவித்துவம்,காத்திரம்,உத்தி,தமிழ் என்பவற்றின் அடிப்படையில் கவிதைகளைப் பலமுறை அலசியே இந்த இறுதி முடிவுக்குவந்தோம்.

முதல் மூன்று பரிசுக்குரிய கவிதைகளை நிர்ணயிப்பதில்சிரமம் இருந்ததுஎன்றாலும் உத்தியில் வித்தியாசப்பட்ட கவிதைதான் இறுதி இலக்கில் முதலாவதாக வெற்றிபெற்றது என்பதைக் குறிப்பிட்டே ஆக வேண்டும். அதே போன்றே ஏனைய பரிசுக்குரிய கவிதைகளும் தெரிவுக்குள்ளாகின அதற்காக ஏனையவை குறைபாடுள்ளவை என்பது பொருளல்ல இப்போட்டியில் பங்குபற்றியவர்களின் மூலம் கவிதைக்கு இன்னும் இருக்கும் செல்வாக்கு தெரிய வருகிறதுஏனென்றால்கவிதையானது இன்று தடம் மாறி வசனத்துக்குப் போய்க்கொண்டிருக்கிறது அதே நேரம் பரிசு

பெறாதவர்கள்கவலைப்படவேண்டியதில்லை.போட்டியில் சிலர் பரிசுபெருகிறார்களென்றால் பெறாதோரின் பங்களிப்புடன்தான்

அது நிறைவேறுகிறது.எனவே ஸ்தாபக குழு இயக்கம் வகவம் நடத்திய கவின்கமல் ஞாபகார்த்த சர்வதேச கவிதைப் போட்டியில் கலந்து கொண்டோர் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கின்றோம்

**தமிழ் மாமணி அல் அஸூமத்**
**கவிஞர் காப்பியக்கோஜின்னா ஷரீபுத்தீன்**
**வதிரி சி.ரவீந்திரன்**

# முல்லை முஸ்ரிபா அவர்களுக்கான பாராட்டுரை

**மேமன்கவி**

ஈழத்தில் 80 களுக்கு ஏற்பட்ட பல்வேறு சமூக அரசியல் நிலவரங்கள்இந்த நாட்டின் தமிழ் இலக்கியத்தில் கணிசமான அளவில் தாக்கத்தை ஏற்படுத்தின. அதன் காரணமாக பல இளம் படைப்பாளிகள் தோற்றம் பெற்றார்கள், பிற்காலத்தில் அவர்களில் முக்கியமான படைப்பாளிகளாக தங்களை அடையாளப்பத்தி கொண்டார்கள்.

அத்தகைய சமூக நிலவரங்களில் ஒன்றாக 90களில் வடபுலத்து முஸ்லிம் மக்கள் பலாத்காரமாக சொந்த மண்ணைவிட்டு விரட்டப்பட்ட அச்சமூகத்தில் அத்தகைய அனுவத்தை எடுத்துச் சொல்லும் படைப்புகள் தரும் படைப்பாளிகள் தோற்றம் பெற்றார்கள். அவர்களின் இலக்கியங்கள் ஈழத்தின் இடப்பெயர்வு இலக்கியமாக அடையாளப்பட்டது. அந்த வரிசையில் முக்கிய படைப்பாளியாக முல்லை முஸ்ரிபா தோற்றம் பெற்றார்.

மு ல்லை முஸ்ரிபா கவிஞர், பத்தி எழுத்தாளர், பாடாசாலை அதிபர், வானொலி அறிப்பாளர் என பன்முக ஆற்றல்மிக்கவராக திகழ்கிறார். பல கவிதைத் தொகுதிகள் பத்தி எழுத்து தொகுப்பு வெளியீட்டுள்ளார், அந்த நூல்களுக்கான தேசிய மற்றும் பிரதேச ரீதியாக சாகித்திய விருதுகளை பெற்று இருக்கிறார்,

வட புலத்து முஸ்லிம் எழுத்து இயக்கத்தை பற்றிய அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருகிறார். வெள்ளாப்புவெளி எனும் தனது அமைப்பின் மூலம் பல முக்கிய நூல்களை வெளியிட்டுள்ளார். வடபுலத்து முஸ்லிம் எழுத்தின் வரலாற்றை தொகுப்பதில் பெரும் ஆர்வமிக்கவராக இருக்கிறார் , ஈழத்தில் தோற்றிய் கவிஞர்களில் ஒரு வித்தி'யாசமான மொழியில் தன் படைப்புகளை தந்து கொண்டிருக்கிறார். ஈழத்து பத்தி எழுத்துலகில் வித்தியாசமான மொழியில் பத்தி எழுத்துகளை எழுதி. வருகிறார். சமீப காலமாக பல விருதுகளை தொடர்ந்து பெற்று கொண்டிருக்கிறார்.

அத்தகைய தனித்துவமான முக்கிய ஆளுமையான ஒரு கவிஞரான முல்லை முஸ்ரிபா அவர்களை, ஈழத்து கவிதைத் துறைக்கு ஒர் இயக்கத்தை தோற்றுவித்த ஒர் ஆளுமையான கவின்கமல் ஞாபகார்த்தமாக நடத்துப்படும் கவிதைப் போட்டிக்கான பரிசளிப்பு விழாவில் அவரை கௌரவிப்பதில் ஸ்தாபக குழு இயக்கம் மகிழ்ச்சி அடைகிறது.

**ஸ்தாபக குழு இயக்கம் வலம்புரி கவிதா வட்டம் (வகவம்)**
**மறைந்த வகவம் ஸ்தாபக பொதுச்செயலாளர் கவிஞர்**
**கவின்கமல் ஞாபகார்த்தமாக நடத்திய சர்வதேச**
**கவிதைப் போட்டியில் முதலாம் பரிசு பெற்ற கவிதை**

## தரணியெலாம் எங்கள் தாயகமாம்

தமிழ்நாடு பள்ளிகொண்டா
புலவர் எஸ். மோகன்குமார்

**காற்றடிக்கும் திசையறிந்து கப்பலோட்டி வாழ்ந்தவினம்**
**காற்றினிலே அலைமோதி கவிழ்ந்துபோன கலமானோம்**
**கங்கையும் கடாரமும் கைப்பற்றி ஆண்டவினம்**
தங்கிடவோ ரிடமின்றி தவிக்கிறது இந்நாட்டில் !

வாழுமுறை இதுவென்று வகுத்துவைத்த தமிழரினம்
வாழவழி யில்லாமல் வதைகிறது மலையகத்தில் !
பாடறிந்து ஒழுகுவது பண்பாடு என்றுசொன்ன
பண்பட்ட ஓரினமோ பதைக்கிறது மனவகத்தில் !

வந்தாரை வாழவைத்து வான்புகழ வாழ்ந்தவினம்
வாழுமிடம் எதுவெனினும் வளம்கொழிக்கச் செய்தவினம்
வாடுகின்ற பயிர்கண்டு வருந்துகின்ற ஈரவினம்
காடுமலை யெவ்விடமும் கதியற்று அலைகிறது !

எவ்வுயிரும் தம்முயிராய் எண்ணுகிறோ மென்றாலும்
எம்முயிரை உயிராக எவருமிங்கு மதிப்பதில்லை !
எதுவந்த போதுமிங்கு பொதுவாக வைத்தவினம்
ஏதுமற்ற சூழலிலே ஏதிலியாய்ப் போனதிங்கே !

நாடற்ற எங்களுக்கு நாலுபக்கம் கடலெல்லை !
ஓடற்ற ஆமைபோல் உழலுகிறோம் முடியவில்லை !
கூடற்ற குயில்காக்கை கூட்டினிலே இனம்பெருக்கும் !
குடிபெயர்ந்த எமதுஇனம் குலம்தழைக்க எதுஇருக்கும் ?

சுட்டெரிக்கும் வெய்யிலிலே சொட்டுகிற நெற்றியின்நீர்
சொட்டுநீர்ப் பாசனமாய்ச் சொட்டுகிறோம் தேயிலைக்கு !
கொழுந்தான இலைபறித்து கூடுகளில் போடுகையில்
கூன்விழுந்தஎம்முதுகில் கொழுந்துகளின் கண்ணுறக்கம்!

இடியிடித்து முகில்திரண்டு இறங்கிவரும் பெருமழைதான்
ஒருநொடியும் நில்லாது ஓடிவிடும் மலைச்சரிவில் !
இரவுபகல் பாராமல் இடுப்பொடிய உழைத்தகூலி
எங்குபோச்சு தெரியாது இருக்கின்றோம் நடுத்தெருவில் !

தேடுகிற பொருளெமக்கு தினக்கூலி யானாலும்
தேடித்தான் சோறுதின்னும் திருக்கூட்ட மரபெமது !
வீடற்றோர் என்றுசொல்லி விலக்கினாலும் வருத்தமில்லை!
நாடற்றோர் என்றசொல்லே நஞ்சாகப் பாய்கிறது !

கிள்ளிகிள்ளி யெடுத்தபோதும் கிளைத்துவரும் தேயிலைதான்
கல்லிகல்லி யெடுத்துவிட்டால் கருவறுந்து போகாதோ !
மழைத்தூரல் பட்டதனால் மலர்ந்தபசுந் தேயிலைதான்
பனித்தூவல் படர்வதனால் பசுமைபோய்க் கருகிடாதோ !

சரிவுகளில் வளர்ந்தபோதும் சாயாமல் நிமிர்ந்துநிற்கும்
தேயிலையின் செடிபோலத் திமிர்ந்துஎழும் எங்களினம் !
வரலாறு ஓரினத்தின் வளைப்புக்கு வளைந்ததில்லை !
வல்லாண்மை கள்ளியென்றும்
வளநிலத்தில் விளைந்ததில்லை !

சூரியனே எம்மதிபர் சொச்சமெல்லாம் நிழலதிபர் !
ஆரிதனை மாற்றவல்லான் ஆதவனே ஆற்றலாளன் !
ஆறாண்டோ நூறாண்டோ ஆட்சியிலே மாற்றமில்லை !
யாராண்ட போதினிலும் எல்லாமே அவன்குடைக்கீழ் !

நீலவானக் கூரையின்கீழ் நெடிதுயர்ந்த மனைத்தொகுதி !
கோலமதி வெண்ணிலவு குளிர்செய்யும் குமிழ்விளக்கு !
உடுக்களெலாம் கூரையின் உட்பொதிந்த மின்விளக்கு !
ஓங்கியதோர் நீர்த்தொட்டி உலவுகின்ற கருமுகில்கள் !

இனம்பார்த்து வரைந்ததல்ல இங்குள்ள அட்சரேகை !
கீழ்மேலாய்ப் பிரிப்பதற்கு கீறியதா தீர்க்கரேகை ?
கற்பனையில் வரைந்தகோடு கறுப்புவெள்ளை
பார்ப்பதில்லை !
கங்காணி கிழித்தகோடு கடைசிவரை நிற்பதில்லை !

இஃதெமது நாடென்ற எல்லைக்குள் நாங்களில்லை !
யாதும்ஊர் என்றுரைத்தோம் இன்றுவரை மாற்றமில்லை
தரணியெலாம் எங்களது தாயகமாம் மறக்கவில்லை !
தன்கன்றுக் கென்றுமட்டும் தாய்மடியோ சுரப்பதில்லை !

ஆர்டிக்கே வடவெல்லை ! அண்டார்டிக் தென்னெல்லை !
கிழக்குமேற்கு பசுபிக்கே கீழ்மேலாய் நின்றவெல்லை !
திசைபத்தும் எமதென்று தெரிவிக்கும் குறியீடே
தலைபத்து கொண்டவெங்கள் தரணிபுகழ் வீரனவன் !

ஆஸ்திரேலி யகங்காரு அலாஸ்காவின் முயல்சுமக்கும் !
அரபுநாட்டு ஒட்டகங்கள் அமேசானில் நீர்குடிக்கும் !
ஆப்பிரிக்க நீர்யானை அயர்லாந்தில் சாணமிடும் !
அமெரிக்க கழுகுவந்து ஆலந்தில் வட்டமிடும் !

எகிப்துநாட்டு நைல்நதியோ இரங்கிவரும் சவுதிக்கு !
இந்தியப்பாம் பாடிவரும் இங்கிலாந்து மகுடிக்கு !
ஈழத்துத் தேயிலையில் ஈராக்கு நீர்குடிக்கும் !
ஈரானின் கல்நெய்தான் செருமனியின் கார்நிரப்பும் !

காபூலின் திராட்சையில் கசகஸ்தான் சாறெடுக்கும் !
கத்தாரின் கடற்கரையில் காமரூனோ மீன்பிடிக்கும் !
கனடாவின் பனிச்சரிவில் கம்போடி யாசறுக்கும் !
கடைக்கோடித் தீவினிலும் கானாவின் பாட்டொலிக்கும் !

சீனத்துப் பெருஞ்சுவரில் சிங்கப்பூர் படம்வரையும் !
சிலிநாட்டு ஆண்டீசில் சிரியாவின் கொடிதெரியும் !
பைசாவின் கோபுரத்தை பல்கேர்யா தாங்கிநிற்கும் !
பாபிலோன் தோட்டத்தில் பாகிஸ்தான் பூப்பறிக்கும்

ஸ்தாபக குழு இயக்கம் வலம்புரி கவிதா வட்டம் (வகவம்)
மறைந்த வகவம் ஸ்தாபக பொதுச்செயலாளர் கவிஞர்
கவின்கமல் ஞாபகார்த்தமாக நடத்திய சர்வதேச
கவிதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற கவிதை

## தேசமெல்லாம் தாயகமாய் மாற்றங்காணும்

இலங்கை கிண்ணியா
கவிமணி அ.கௌரிதாசன்

நானென்ற தனியுடைமை அகலுமானால்
நாமென்ற பொதுவுடைமை மலருமானால்
கோனாட்சி கோடாமல் கிடைக்குமானால்
கொத்தடிமை நிலை முற்றாய் மறையுமானால்
வானமழை பொய்க்காமல் பொழியுமானால்
வயல் நிலங்கள் சால்புடனே விளையுமானால்
தேனாறும் பாலாறும் ஓடுமானால்
தேசமெல்லாம் தாயகமாய் மாற்றங்காணும்!.

பெற்றிட்ட தாயவளைத் துதிப்போமானால்
பிறந்தபொன் நாட்டினைநாம் மதிப்போமானால்

கற்றபடி கல்விவழி நிற்போமானால்
களவு பொய்யைப் புறந்தள்ளி வைப்போமானால்
மற்றவரும் மனிதரென்று நினைப்போமானால்
மனம் மகிழ இனியமொழி உரைப்போமானால்
பற்றுடனே பணிகளினைப் புரிவோமானால்
பாரெல்லாம் தாயகமாய் மாற்றங்காணும்!.

ஏழ்மைமிகு கன்னியர்கள் வாழ்வு கண்டால்
எம்மிளைஞர் சீதனத்தை எதிர்த்து நின்றால்
கால்போன போக்கினிலே மனம் போகாமல்
காசுக்காய் பலகட்சி தனைத்தாவாமல்
வாழ்வுக்கு வரம்பிட்டு வாழ்வோர் கூட்டம்
வாய்மைக்கு வழிவிட்டு வாழ்ந்தால் ஏற்றம்
தாழ்வுயர்வு இல்லாத சமத்துவத்தால்
தாரணியெம் தாயகமாய் மாற்றங்காணும்!.

வல்லரசால் போர்முறைகள் ஒடுங்குமானால்
வன்முறைகள் முற்றாக முடங்குமானால்
கொல்லுகின்ற சிந்தனைகள் அழியுமானால்
கொலை, களவு, வன்புணர்வு ஒழியுமானால்
அல்லல் தரும் புயற்காற்று, பூகம்பங்கள்
அதிர்ச்சிதரும் மண்சரிவு அனர்த்தமெல்லாம்
இல்லாமல் அனைவருமே சிரித்திருந்தால்
இத்தரணி தாயகமாய் மாற்றங்காணும்!.

**நீதிவழி மக்களெலாம் நிற்கக்கற்றால்**
**நியாயத்தின் பாதையிலே வாழப்பெற்றால்**
**சாதி, மொழி, இனமென்ற சாயம் போனால்**
**சகலருமே இந்நாட்டு மன்னரானால்**
**ஆதிக்கம் அதிகாரம் அகலுமானால்**
**ஆசையெனும் கொடியபிணி விலகுமானால்**
**சோதியொன்று விரைவினிலே தோன்றுமானால்**
**சொர்க்கமெங்கள் தாயகமாய் மாற்றம் காணும்!.**

ஸ்தாபக குழு இயக்கம் வலம்புரி கவிதா வட்டம் (வகவம்)
மறைந்த வகவம் ஸ்தாபக பொதுச்செயலாளர் கவிஞர்
கவின்கமல் ஞாபகார்த்தமாக நடத்திய சர்வதேச
கவிதைப் போட்டியில் மூன்றாம் பரிசு பெற்ற கவிதை

## தரணியெலாம் எங்கள் தாயகமாம்

இலங்கை பாவேந்தல்
பாலமுனை பாரூக்

(1)

உருவாக வேண்டுமினி ஒருபுதிய வரலாறு
வரவேண்டும் இளைஞரணி, எழுவோம்!
வருங்காலம் செழிப்பாகி வாழ்விலொளி பாய்ந்துவர
முறையாக நற்பணிகள் புரிவோம்!
ஒருதாயின் மக்களென ஒன்றிணைந்து வாழ்ந்தவர்கள்
பிரிந்துவிட நடந்ததெது?,அறிவோம்!
சிறுமதியர் கொள்கைகளால்
சிந்தனையின் குறைபாட்டால்
சீர்குலைந்து போய்விட்டோம்:தெளிவோம்!

(2)

ஆண்பெண்கள் சேர்ந்தெழுவோம்
அனைவருமே ஒன்றிணைவோம்
அடிப்படைகள் ஒழுக்கநெறி அறிவோம்!
வீண்தர்க்கம் பேதங்கள் வேண்டாத செயல்களினால்
வெறித்தனமாய் நடப்பதனை விடுவோம்!
தேன்போன்ற சொற்களினால்
தெவிட்டாத மொழிகளினால்
நாம்சேர்ந்து அன்பினையே சொரிவோம்!
ஏன்இன்னும் தயக்கங்கள்
எழுந்திடவே வேண்டுமினி,
எல்லோரும் வாருங்கள் இணைவோம்!

(3)

கல்வியிலே மேம்படுவோம் கருத்தினிலே
ஒன்றிணைவோம்
எல்லோரும் நாம்சேர்ந்து எழுவோம்!
பல்லினமாய் வாழ்பவர்கள்
பயணிக்கத் தக்கதுவாய்
நல்லதொரு வழிமுறையைத் தெரிவோம்!
உள்ளவர்கள்,இல்லாதோர்
உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள்
என்றுவரும் பேதங்கள் தகர்ப்போம்!
எல்லோரும் நலம்வாழ ஏற்றதொரு கட்டமைப்பை
இயற்றிடுவோம்,விதிகளினைச் சமைப்போம்!

(4)

இனமென்றும் மொழியென்றும்
எவரெம்மைப் பிரித்தார்கள்?
இதைமாற்ற வேண்டுமினி எழுவோம்!
குணநலனே கொண்டவராய்
கொள்கையிலே வென்றவராய்
கூடியொரு புதுவழியை அமைப்போம்!
பணக்காரன் ஏழையெனப் பாகுபடும் நிலைமாற்றிப்
புதிதாகச் சமதர்மம் விதைப்போம்!
மனங்களெலாம் மகிழ்ந்திடவே
மானுடமும் தழைத்திடவே
தனியுடை
மைக் குடைசாய உழைப்போம்!

(5)

உலகிலுள்ள மக்களெல்லாம்
உண்மையிலெம் உறவுகளே
ஒன்றுஇறை, ஒன்றுகுலம் அறிவோம்!
குழப்பமெதும் இல்லாமல் குதுகலமாய் வாழ்ந்திடவே
அழகான பண்புகளைத் தெரிவோம்!
வளங்களினைப் பெற்றுவிட வறுமைகளை ஒழித்துவிட
இளைஞரெலாம் சேர்ந்திங்கே எழுவோம்!
உலகமெங்கள் கரங்களிலே உழைப்பவர்கள்
உறுதியிலே
சளைக்காமல் செயற்படுவோம்: விரைவோம்!

(6)

தரணியெலாம் எங்களுக்குத் தாயகமே..,அறிந்தவராய்
தயங்காமல் நாங்களினி எழுவோம்!
புறப்படுவோம் நாங்களொரு புதுவழியைத்
தேர்ந்திடுவோம்
புத்தூக்கம் பெற்றவராய் மலர்வோம்!
உரம்பெற்றுச் செயற்படுவோம் உன்னதங்கள்
பெற்றிடுவோம்
உயர்குணங்கள் நடத்தைகளால்
மகிழ்வோம்!
வரம்பெற்ற மக்களென வாழ்ந்திடுவோம் நாமென்றும்
வரலாற்றில் புகழ்பெற்று மிளிர்வோம்!

## தரணியெலாம் எங்கள் தாயகமாம்

## சர்வதேச கவிதைப் போட்டி-2020

## முடிவுகள்

வலம்புரி கவிதா வட்டம் ஸ்தாபக குழு இயக்கம், மறைந்த வகவம் ஸ்தாபக பொதுசசெயலாளர் கவிஞர் கவின்கமல் ஞாபகார்த்தமாக நடத்திய சர்வதேச கவிதைப் போட்டி-2020

முதலாம் பரிசு- ரூபா 25000.00
பணப்பரிசும் விருதும் சான்றிதழும்

புலவர் எஸ். மோகன்குமார்- தமிழ்நாடு

இரண்டாம் பரிசு- ரூபா 12500.00
பணப்பரிசும் விருதும் சான்றிதழும்

கவிமணி அ,கௌளரிதாசன்-கிண்ணியா

மூன்றாம் பரிசு- ரூபா 7500.00
பணப்பரிசும் விருதும் சான்றிதழும்

பாலமுனை பாரூக்- பாலமுனை

பத்து ஆறுதல் பரிசுகள்

தலா ரூபா 1000.00 பணப்பரிசும் சான்றிதழும்

1.எஸ்.சுதாகரன் -சாவகச்சேரி

2.மெய்யன் நடராஜா- வத்தளை

3.எம்.ஐ.அச்சி மொஹமட்- சம்மாந்துறை

4.ரீ.எல்.ஜவ்பர்கான்-காத்தான்குடி

5. திருமதி ரி.விஷ்ணு குமார்- திருகோணமலை

6.எச்.எம். அப்துல் ஹலீம்-ஏறாவூர்

7.ஏ,எச்.எம்.ஜிஹார்- புதிய காத்தான்குடி

8. எச்.எப். ரிஸ்னா- கல்கிசை

9.ஜி. கங்கனா-மட்டக்களப்பு

10.மூர்த்தி தினு- மட்டக்களப்பு.

வ-க-வ-ம்

------------

சுட்டால் கெடாது
வெண்மை தரும் சங்கேபோல்
தொட்டால் கவித்துவம்
துலங்கிடல் வேண்டுமென
வட்டம் அமைத்தோம்
வலம்புரிகள் சேர்ந்து

சங்காய் முழங்குவோம்!
தமிழை வழங்குவோம்!
மங்காமல் எங்கள்
வட்டம் வளர்வதற்கு
உங்கள் ஆதரவை
உளத்தால் வேண்டுகிறோம்!

சிங்களமும் எங்களதே
செந்தமிழும் எங்களதே
ஆங்கிலமும் எங்களதே
அனைத்து மொழிகளும் எங்களதே
வங்கமும் எங்களதே  மக்கள்
வாழுமிடமெலாம் எங்களதே

எங்கெங்கு தேசங்கள்
இருக்கின்றனவோ
அங்கெல்லாம் நம் வீடே!
ஆதலினால்தான் நாம்
“தரணியெலாம் எங்கள்
தாயகமாம்”எனும்
நிறைமொழி ஏற்றோம்
நேசக்கரம் நீட்டினோம்

கூடு கட்டி வாழாத
குயிலாகக் குரல் கொடுத்து
பாடுதற்கு வந்துள்ளோம்
பாவலர்கள் மத்தியிலே
வீடுகள் தோறும்-கவிதை
விளங்கிடச் செய்திடுவோம்
ஏடுகளும் வெளியிடுவோம்
இவையேதாம் எம் கொள்கை.

- 1981

# நன்றிகள்

ஸ்தாபக குழு இயக்கத்தின் செயற்பாடுகளில் மும்முரமாக முன்னின்று உழைத்துவரும் ஸ்தாபக குழு உறுப்பினர்களான தாஸிம் அகமது, கலைக்கமல் ,நூர்டீன் சிரேஷ்ட ஆலோசகர்களான கலாபூஷணம் மேமன்கவி 'கவிதை கேளுங்கள்' நிறுவனர் பாத்திமா மைந்தன் ஆகியோரின் பங்களிப்புடன் போட்டிக்கான நடுவர் குழு உறுப்பினர்கள் தமிழ்மாமணி அல் அஸூமத் காப்பியக்கோ ஜின்னா ஷ ரீபுத்தீன் கவிஞர் வதிரி சி.ரவீந்திரன் ஆகியோர் வழங்கிய ஒத்துழைப்பினாலும் பரிசளிப்பு விழா செம்மையடைந்துள்ளது.

விசேடமாக இந்த விழா சிறப்புற சிறப்பான முறையில் உதவிய இலக்கியப் புரவலர் ஹாஸிம் உமர், வகவ அபிமானி எஸ,ரவீந்திரன் ஆகியோருக்கு எமது நன்றிகள்,

மற்றும் இந்த கவிதைப் போட்டிகள் சம்பந்தமான செய்திகளையும் இப்பரிசளிப்பு பற்றிய செய்திகளையும் பிரசுரித்த சகல ஊடகங்களுக்கும் எமது நன்றிகள்.

## ஸ்தாபக குழு இயக்கம்
## வலம்புரி  கவிதா வட்டம் (வகவம்)

தலைவர்

**டாக்டர் தாஸிம் அகமது**

செயலாளர்

**கலைக்கமல்**

பொருளாலர்

**டாக்டர் எம்.எச்.நூர்தீன்**

உறுப்பினர்கள்

**பாத்திமா மைந்தன்**

**மேமன்கவி**


KALABHOOSHANA STATE AWARDS CEREMONY
2015
Organized by
Department of Cultural Affairs



With Best Compliments From

S.Ravindran J.P

SUPER LIGHT GARMENTS INDUSTRIES (PVT) LTD.
Office: 258/22, Dam Street, Colombo 12, Sri Lanka,
Phone 94112444415 fax-94112444416
super light @sltnet .lk

ஸ்தாபக குழு இயக்கம்
வலம்புரி கவிதா வட்டம்(வகவம்)
09, SAUNDERS COURT, COLOMBO 02. SRILANKA.
94779664063. doctorthassim@gmail.com

ISBN-978-624-99091-0-6